முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1348

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

08.06.2023, வியாழக்கிழமை

1. ஞான சக்தியே அரங்கா வாழ்க
ஞான சித்தியே தேசிகா வாழ்க
தானதர்மத்தின் பலமே வாழ்க
தரணிகாத்திடும் அறமே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 25 ம் நாள், 08.06.2023, வியாழக்கிழமை)
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
ஊழ்போக்கும் மகா சக்தி நீயப்பா
உலகை காக்கும் மாதவசி நீயப்பா
3. வாழ்வெல்லாம் உலகோர் உன்வழி சரணடைந்து
வருங்காலமே வள்ளலே என வணங்கி வந்தால்
வருவோர்க்கு உலகில் அழியாமை
வரமாக உன்வழி வடிவேலன் யான் தருவேன்
4. தருகின்ற பெறுகின்ற வாய்ப்புதனை
தக்கபடி உலகோர்க்கு யானே உன்வழி நடத்த
நடத்துகின்ற இந்த மகாசூட்சுமத்தை நம்பிக்கை கொண்டு உலகோர் ஓங்காரக்குடில் நோக்கி
இடர்வெல்ல வந்தால் போதும் எல்லோர்க்கும் பாதுகாப்பான வாழ்வாய் மாறும்
5. மாறுதலைத் தரும் மகா தவசி நீ
மக்களை மீட்கும் மகா யோகி நீ
ஆறுதல்பட உன்வழி உலகோர் சரணடைய
அனைவருக்கும் ஞானியாகின்ற வாய்ப்பு
6. வாய்ப்பு வரமும் அரங்கன் உன்வழி
வடிவேலன் யான் வழங்கி காத்தருள்வேன்
ஐயமற அரங்கன் கொள்கையையும்
அன்னதான உயர் சேவையையும் ஏற்று

7. உலகோர் முன் மொழிந்து
உலகமெல்லாம் இனிதே பரப்பி தொண்டு செய்து
ஆற்றல்பட இயங்கினாலே போதும்
அகிலத்துக்கு மாற்றம் சடுதி காணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—